# இலக்ட்ரோகோட்டறி சிகிச்சை முறை (Electrocautery)

## 1. Electrocautery என்றால் என்ன?

எமது சருமத்தில் காணப்படும் சிறிய கட்டிகளை அல்லது சிறிய தொற்றாத உண்ணிகளை அகற்றுவதற்கு பயன்படும் சிகிச்சை முறையாகும். மின்சாரத்தினால் electrode இல் உருவாக்கப்படும் மிகச் சிறிய மின்அழுத்தத்தால் உருவாக்கப்படும் வெப்பத்தினை தோலின் மேலுள்ள கட்டிகளின் மீது நேரடியாக செலுத்தி அகற்றப்படும்.

## 2. Electrocautery எவ்வாறான சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படும்?

- பரவாத உண்ணிகளை அகற்றுவதற்கு. உ-ம் : Seborrhoic warts
- சிறிய கட்டிகளை அகற்றுவதற்கு
- சிறிய சத்திரசிகிச்சையின்போது ஏற்படும் சிறியளவிலான குருதி வெளியேற்றத்தை தடுப்பதற்கு (சிறிய குருதி குழாய்களை சுடுவதற்கு)

## 3. எவ்வாறானவர்களிற்கு இவற்றை பயன்படுத்தி சிகிச்சையளிக்க முடியாது?

I. முற்றாக பாவிக்க முடியாதவர்கள்

இருதய இயக்கி (ICD) கருவிகளை பொருத்தியுள்ள நோயாளிகளுக்கு

II. பாதுகாப்புடன் பாவிக்க கூடியவர்கள்

i. பேஸ்மேக்கர் (இருதயமுடுக்கி) பொருத்தியவர்கள்

ii. குருதி உறையாமல் மருந்துகளை பாவிப்பவர்கள் அல்லது குருதி உறைவதில் பிரச்சினை உள்ளவர்கள்.

iii. கண்களிற்கு மிக அருகில் செய்ய வேண்டி ஏற்படின்

## 4. சிகிச்சையளிப்பதற்கு முன்பு

- உங்களிற்கு வேறு நோய்கள் உள்ளனவா அவற்றிற்கு பாவிக்கும் மருந்துகள் என்பவற்றை வைத்தியரிடம் கூறல் வேண்டும்.
- ஒவ்வாமை வகைகள் இருப்பின் தெரிவிக்க வேண்டும்.
- இருதய கருவிகள் / வேறு இலத்திரனியல் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பின் கூறல் வேண்டும்.
- ஆபரணங்கள், கைக் கடிகாரங்கள் கழற்றப்பட வேண்டும்.
- சிகிச்சையின்போது

வலியைக் குறைப்பதற்கு / இல்லாமல் செய்வதற்கு

i. பூச்சு விறைப்பு மருந்து வகைகள்

ii. விறைப்பூசி மருந்துகள் பயன்படுத்தப்படும்.

## 5. இதனால் ஏற்படும் பக்க விளைவுகள் என்ன?

- வலி / சிறிய மின் அடித்தல் போன்ற உணர்வு ஏற்படும்.
- கிருமித் தொற்றுக்கள் ஏற்படலாம்.
- கண்ணிற்கு மிக அருகில் செய்யும்போது சிறிய பாதிப்புகள் ஏற்படலாம்.
- இருதய கருவிகள் அல்லது உடலின் இயக்கத்திற்கான இலத்திரனியல் உபகரணங்கள் பொருத்தப்பட்டிருப்பின் அவற்றின் செயற்பாடு பாதிக்கும்.
- சிகிச்சையளிக்கப்பட்ட இடத்தில் அடையாளங்கள் உருவாகும்.
- தோலின் நிறம் மாறலாம். (காலப்போக்கில் குறையலாம் / முற்றாக இல்லாமல் போகலாம்)

## 6. சிகிச்சையளித்தபின் தேவையேற்படின்

i. வலியை குறைக்கும் மருந்துகள்

ii. கிருமித் தொற்றைத் தடுக்கும் பூச்சு மருந்துகள் வைத்தியரால் கொடுக்கப்படும்.

iii. சிகிச்சையின் பின் நீங்கள் குளித்து / கழுவி சுத்தமாக இருத்தல் வேண்டும்.

சருமத்தின் நிறம் மாறின் அவற்றிற்கு தேவையேற்படின் பிறம்பான பூச்சு மருந்துகள் கொடுக்கப்படும்.